24.03.2025.

கூடுதல் அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் விழுப்புரம் )

அமர்வு வழக்கு எண். 205/2018

அ.சா.30

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிமாறன் | | |
| த/பெ | ராஜேந்திரன் | | |
| கிராமம் | விழுப்புரம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 37/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விழுப்புரம் மாவட்டம் பெரியதச்சூர் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 2014ம் வருடம் விழுப்புரம் இருப்பு பாதை காவல் நிலையத்தில் காவலராக பணியிலிருந்த போது சுமார் 13 வருடங்களுக்கு முன்பாக நான் ஒரு நாள் இரவு பணி பார்த்தேன். அன்று இரவு பணி எனக்கு நடைமேடை ரோந்து பணியாகும். இரவு 9 மணி முதல் காலையில் 9 மணி வரை பணி நேரமாகும். நான் நடைமேடை ரோந்து பணி பார்த்து விட்டு காலையில் வீட்டிற்கு வந்துவிட்டேன். மறுநாள் மதியம் 2மணிக்கு பகல் பாரா பார்ப்பதற்காக சித்ரா என்பவரை மாற்றிவிட்டு பணியிலிருந்தேன். அதன் பிறகு பிளாட்பார்மில் புத்தகம் விற்கும் ஒரு நபர் இறந்துவிட்டதாக என்னிடம் சொன்னார்கள். அவர் பெயர் எனக்கு

தெரியவில்லை. என்னிடம் அவர் எங்கு இறந்தார் எதனால் இறந்தார் என சொல்லவில்லை. என்னை மேல் அதிகாரிகள் விசாரித்தார்களா என்றால் இல்லை. (சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

உங்களை டிஎஸ்பி, ஏடிஎஸ்,பி, எஸ்பி, இன்ஸ்பெக்டர், காவல் ஆய்வாளர், குற்றபுலனாய்வு துறை ஆகியோர்கள் விசாரித்தார்கள் என்றும், அவர்களது விசாரணையில் கடந்த 06/05/2014 ந் தேதி இரவு பிளாட்பார்ம் அலுவலுக்கு செல்வதற்காக 20 . 40 மணிக்கு காவல் நிலையத்திற்கு வந்த போது காவலர் திரு. பாரதி தாசன் என்பவர் பாராவில் இருந்தார் என்றும், நானும் காவலர் 684 உதயகுமார் என்பவரும் காவல் நிலையத்தில் அறிக்கை செய்துவிட்டு 4, 5, 6 பிளாட்பார்ம் அலுவலில் சென்றோம் என்றும், அப்போது காவல் நிலையத்தில் இரு நபர்கள் லுங்கி போர்த்தியவாறு படுத்திருந்தார்கள் என்றும், மறு நாள் 07/05/2014 ந் தேதி காலை 6 மணிக்கு பாத் ரூம் போவதற்காக காவல் நிலையம் வந்தேன் என்றும், அப்போது பாரா காவலில் பாரதிதாசன் இருந்தார் என்றும், இரயில்வே ஸ்டேசனில் வண்டியில் திண்பண்டங்கள் விற்கும் துரை என்பவரையும் இன்னொரு நபரையும் தனி தனியாக லீடிங் செயின் போட்டு காவல் நிலையத்தில் கட்டி வைத்திருந்தார்கள் என்றும், அந்த நபர் இரயிலில் விற்பனை செய்யும் ஜெயவேல் என்று தெரிந்துக்கொண்டேன் என்றும் ஜெயவேல் சட்டை போடாமல் கைலியை தளர்வாக இடுப்பில் கட்டியிருந்த மாதிரி தெரிந்தது என்றும், பிறகு நான் பாத்ரூம் சென்றுவிட்டு திரும்பி வந்தேன் என்றும் , அப்போது ஜெயவேல் அப்படியே உட்கார்ந்து இருந்ததை பார்த்தேன்

என்றும், நான் துரையை மட்டும் விசாரித்தேன் என்றும், அவர் இன்னொரு தள்ளு வண்டி விற்பனையாளரை நான் தாக்கிவிட்டேன் என்று கூறினார் என்றும், பிறகு நான் வீட்டிற்கு சென்று ஓய்வு எடுத்து விட்டு 07/05/2014 ந் தேதி மதியம் 14 – 21 பணி பார்ப்பதற்காக 14 மணிக்கு காவல் நிலையம் வந்தேன் என்றும், அப்போது பெண் காவலர் சித்ராவை மாற்றி நான் பாரா பணி செய் தேன் என்றும், நான் காவல் நிலையத்திற்கு வந்த போது காவல் நிலையம் பர பரப்பாகவும் , கழுவி விட்ட மாதிரியும் தெரிந்தது என்றும், உள்ளூர் போலீஸ் அதிகாரிகள் காவல் நிலையத்தில் இருந்தார்கள் என்றும், நான் விடுவித்த சித்ராவை விசாரிக்க அன்று காலை 6 மணிக்கு மேல் காவலர் திருகுமரன், தலைமை காவலர் பாலமுருகனும், ஜெயவேலுவை முதல் நாள் தூத்துகுடி மாவட்டத்தை சேர்ந்த அசாரியா என்பவரிடமிருந்து மணி பர்ஸ், செல்போன் ஆகியவற்றை திருடியது தொடர்பாக விசாரிக்கும் போது பலமாக அடித்துவிட்டதனால் அவர் மயக்கம் அடைந்துவிட்டார் என்றும், ஆய்வாளர், காவலர்கள் திருகுமரன், ஸ்ரீநாத் மற்றும் அன்பரசன் ஆகியோர்களுடன் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு ஜெயவேலுவை சிகிச்சைக்கு கொண்டு போன தாகவும் வழியில் ஜெயவேல் இறந்துவிட்டதாகவும் அவரது பிரேதம் அரசு மருத்துவமனையில் உள்ளதாகவும் அவர் தன்னிடம் கூறியதாக சித்ரா சொன்னதாகவும், மதியம் 15 மணி முதல் டிஎஸ்.பி, எடிஎஸ்பி, எஸ்.பி, ஆய்வாளர் ஆகியோர்கள் எங்கள் காவல்நிலையத்திற்கு வந்தார்கள் என்றும், காவல் நிலையத்தில் இருந்த பொது நாட்குறிப்பு, கைது பரிசோதனை பதிவேடு மற்றும் பாரா மாற்று பதிவேடு ஆகியவற்றை ஆய்வாளர், எழுத்தர் புருசோத்தமன், மற்றும் கணினி காவலர் ராஜீவ்காந்தி ஆகியோரை வைத்துக்கொண்டு எழுதினார் என்றும்,

ஜெயவேல் திருடியது சம்மந்தமாக விழுப்புரம் இருப்பு பாதை காவல் நிலைய கு.எ ண்.25/2014 இதச பிரிவு 379 ன் படி வழக்கு ஒன்றை காவல் ஆய்வாளர் பதிவு செய்தார் என்றும், ஜெய வேல் இறந்தது சம்மந்தமாக ஆய்வாளர் ஒரு புகார் ஒன்றினை காவல் துணை கண்காணிப்பாளரிடம் கொடுத்தார் என்றும், அதன் பேரில் கு.எண். 26/2014, குவிமுச 176 (1ஏ) ன் படி வழக்கு ஒன்றை பதிவு செய்தார் என்றும், ஜெயவேல் இறந்தது சம்மந்தமாக ஆய்வாளர் வாசுதேவன், த.கா, பாலமுருகன், காவலர்கள் திருகுமரன், ஸ்ரீநாத், மற்றும் லோகேஷ்குமார் ஆகியோர்களை 08/05/2014 காலையில் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள் என்றும், உண்மையில் 07/05/2014 ந்தேதி காலையில் 8 மணி முதல் 14 மணி வரை காவல் நிலையத்தில் பாரா பார்த்த பெண் காவலர் 1285 சித்ராவை தான் நான் பாரா மாற்றினேன் என்றும், ஆனால் பாரா மாற்று பதிவேட்டில் அந்த சமயத்தில் காவலர் 1297 ஸ்ரீநாத் என்பவர் பாரா பார்த்தது போல அவரை நான் விடுவித்ததை போல பதிவேட்டை மாற்றி எழுதியுள்ளார்கள் என்றும், விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**